தொழில் நுட்பக் கல்வித் துறை

| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| தொழில் நுட்பக் கல்வி ஆணையர் (கூ/பொ)<br>சென்னை 600 025 | அனைத்து முதல்வர்கள்<br>அரசு / அரசு உதவி பெறும் மற்றும் சுயநிதி<br>பொறியியற் கல்லூரிகள் |

கடித எண். 21906 / ECA1 / 2011, நாள்: 16.6.2011

ஐயா,

பொருள்: தொழில் நுட்பக் கல்வி இயக்ககம் – 2010 – 2011–ஆம் கல்வி ஆண்டு முதல் அரசு, அரசு உதவி பெறும் மற்றும் சுயநிதி பொறியியற் கல்லூரிகளில் முதலாமாண்டு மற்றும் நேரடி இரண்டாம் ஆண்டு ஒற்றைச்சாளர கலந்தாய்வு மூலம் சேர்க்கை பெற்ற முதல் தலைமுறை பட்டதாரிக்கான கல்வி கட்டணச் சலுகை பெற்ற மாணவர்கள் தொடர்ந்து அதே கல்லூரியில் பயில்பவர்களுக்கு 2011 – 2012–ஆம் கல்வியாண்டிற்கும் முதல் தலை முறை பட்டதாரிக்கான கல்வி கட்டணச் சலுகை வழங்குதல் – தொடர்பாக.

பார்வை:
1. அரசாணை (நிலை) எண். 85 உயர் கல்வி (ஜே2) துறை நாள்:16.4.2010
2. அரசாணை (நிலை) எண்.142 உயர் கல்வி (ஜே2) துறை, நாள்:9.6.2010
3. அரசுக் கடித எண். 10936 / ஜே2 / 2010–1, நாள்: 2.7.2010

---------

பார்வை (1) மற்றும் பார்வை (2)–ல் காணும் அரசாணைகளில் குறிப்பிட்டுள்ளவாறு, 2010–2011–ஆம் கல்வியாண்டு முதல் அரசு, அரசு உதவிபெறும் மற்றும் சுயநிதி பொறியியற் கல்லூரிகளில் முதலாமாண்டு மற்றும் நேரடி இரண்டாமாண்டில் ஒற்றைச்சாளர கலந்தாய்வின் மூலம் சேர்க்கைப் பெற்ற மாணவர்களில் முதல் தலைமுறை பட்டதாரி மாணவர்களுக்கு கல்விக் கட்டணச் சலுகை வழங்கப்பட்டது.

கடந்த ஆண்டில் (2010–2011), முதல் தலைமுறை பட்டதாரி மாணவர்களுக்கான சலுகை பெற்ற மாணவர்களில் முதலாமாண்டில் சேர்க்கைப் பெற்று தற்போது (2011–2012) இரண்டாமாண்டிற்கு செல்லும் மாணவர்கள் மற்றும் நேரடி இரண்டாமாண்டில் சேர்க்கைப் பெற்று தற்போது (2011–2012) மூன்றாமாண்டிற்கு செல்லும் மாணவர்களில் தொடர்ந்து தங்கள் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களிடம் 2011–2012–ஆம் ஆண்டிற்கான கல்விக் கட்டணத் தொகை (Tuition Fees) வசூலிக்க வேண்டாமெனத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. கடந்த ஆண்டில் கீழ்க்கண்டவாறு கல்விக் கட்டணச் சலுகை வழங்கப்பட்டுள்ளது.

| வரிசை எண். | கல்லூரியின் தன்மை | ஒட்டு மொத்த கல்விக் கட்டணத் தொகை | முதல் தலைமுறை பட்டதாரிக்கான கல்விக் கட்டணச் சலுகை தொகை (Tuition Fees) | மாணவர்களி டமிருந்து பெறப்பட வேண்டிய மீதித்தொகை |
|---|---|---|---|---|
| 1) | அரசு பொறியியல் கல்லூரிகள் | ரூ.7,550/- | ரூ.2,000/- | ரூ.5,550/- |
| 2) | <u>அரசு உதவி பெறும் கல்லூரிகள்</u> | | | |
| | அ) அரசு உதவி பெறும் பாடப் பிரிவுகள் | ரூ.8,500/- | ரூ.4,000/- | ரூ.4,500/- |
| | ஆ) சுயநிதி பாடப் பிரிவுகள் | | | |
| | 1) தரச்சான்று பெறப்படாத பாடப் பிரிவுகள் | ரூ.32,500/- | ரூ.20,000/- | ரூ.12,500/- |
| | 2) தரச்சான்று பெறப்பட்ட பாடப் பிரிவுகள் | ரூ.40,000/- | ரூ.20,000/- | ரூ.20,000/- |
| 3) | <u>சுயநிதி பொறியியல் கல்லூரிகள்</u> | | | |
| | அ) தரச்சான்று பெறப்படாத பாடப் பிரிவுகள் | ரூ.32,500/- | ரூ.20,000/- | ரூ.12,500/- |
| | ஆ) தரச்சான்று பெறப்பட்ட பாடப் பிரிவுகள் | ரூ.40,000/- | ரூ.20,000/- | ரூ.20,000/- |

மேற்கண்டவாறே, இந்த ஆண்டிலும் (2011-2012) கல்விக் கட்டணச் சலுகை வழங்கப்பட வேண்டியுள்ளதால், தங்கள் கல்லூரிகளிலிருந்து முதல் தலைமுறை பட்டதாரிகளுக்கான மாணவர்களின் பட்டியல்களைப் பெற்று, இயக்ககத்தில் ஆய்வு செய்து, கல்விக் கட்டணச் சலுகைக்கான தொகை கடந்த ஆண்டினை போலவே காசோலை / கேட்பு வரைவோலை மூலம் அனுப்பி வைக்கப்படுமெனத் தெரிவிக்கப்படுகிறது. அதற்கான அட்டவணை / சுற்றறிக்கை பின்னர் அனுப்பி வைக்கப்படுமெனவும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

(ஒம்...) குமார் ஜயந்த்
தொழில் நுட்பக் கல்வி ஆணையர் (கூ.பொ.)

தொழில் நுட்பக் கல்வி ஆணையருக்காக (கூ/பொ)